விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, வைகாசி - 24 திங்கள் 07.06.2021 மலர் - 2, இதழ் - 62

# சேவைத்துளிகள்



கள்ளக்குறிச்சி மாவட்டம் ஆர்.எஸ்.எஸ் தொடர்ந்து பல சேவைப் பணிகளை செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக கள்ளக்குறிச்சி அரசு பொது மருத்துவமனைக்கு, சுடுதண்ணீர் சாதாரண தண்ணீர் குளிரூட்டடப்பட்ட தண்ணீர் என மூன்று விதமான நீர்களும் கிடைக்கும் ஏழு வாட்டர் டிஸ்பென்சர் சாதனங்கள் வழங்கப்பட்டது.



ஸ்டார் பாக்ஸஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் உதவியுடன் ஆர்.எஸ்.எஸ் சேவைப்பிரிவான சேவாபாரதி சார்பில் அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு இரண்டு ஆக்சிஜன் செறிவூட்டிகள் வழங்கப்பட்டது.



ஆர்.எஸ்.எஸ் தொண்டர்கள், சிவகங்கை அரசு மருத்துமனையில் சிகிச்சை பெற்றுவரும் கொரோனா நோயாளிகளுக்கு, காய்கறி சூப், மூலிகை கஞ்சி, பச்சை பயறு சுண்டல் மற்றும் உணவு வழங்கினர்.



சேவா தினத்தை முன்னிட்டு சென்னை வேளச்சேரியில் ஏழை எளியோருக்கு மோடி கிட் எனும் மளிகை பொருட்கள் அடங்கிய பை வழங்கப்பட்டது.



சேவாபாரதி தமிழ்நாடு சார்பாக வடபழனி, திருவொற்றியூர், அம்பத்தூர், தாம்பரம், மாம்பலம், பெரம்பூர், மேடவாக்கம் மற்றும் ஆத்தூர் ஆகிய பகுதிகளில் முன்களப் பணியாளர்கள் மற்றும் ஏழை எளிய மக்களுக்கு மளிகை பொருட்கள் வழங்கப்பட்டன.

விழுப்புரம் ஆர்.எஸ்.எஸ் மாவட்ட அலுவலகமான "மாதவம்" கொரானா தடுப்பூசி மையமாக செயல்பட்டு வருகிறது.





திருநெல்வேலி ஆர். எஸ்.எஸ், சேவாபாரதி சார்பாக கபசுரக்குடிநீர், உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

கொடைக்கானலில் ஆர்,எஸ். எஸ், சேவபாரதி மூலமாக கொரோனாவினால் பாதிப்படைந்த ஏழை எளிய பொதுமக்களுக்கு மளிகை பொருட்கள் வழங்கப்பட்டது.






மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு சேவாபாரதி தென்தமிழ்நாடு சார்பில் ஆக்சிஜன் கான்சன்ட்ரேடர் வழங்கப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர் ஏ கே செல்வராஜ் அதனை முன்னின்று வழங்கினார்.

மேட்டுப்பாளையம் சுற்றுவட்டார பகுதிகளில் கொரோனா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவரின் உடல்களை இலவசமாக அடக்கம் செய்யும் சேவைக்காக அமரர் ஊர்தி சேவை யை பிரகதி சேவா அறக்கட்டளை சார்பில் துவக்கி வைக்கப்பட்டது.



. மேட்டுப்பாலையத்தில் கொரோனா நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்ட நோயாளிகளுக்கு 'ஆயுஷ் 64' மாத்திரை வழங்கும் நிகழ்ச்சியும், அரசு மருத்துமனையில் உள் நோயாளிகள் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு கபசுரக் குடிநீர் மற்றும் ஆர்சனிக் ஆல்பம் 30 சி மாத்திரை வழங்கப்பட்டது.



சேவா தினத்தை முன்னிட்டு சென்னை வேளச்சேரியில் ஏழை எளியோருக்கு மோடி கிட் எனும் மளிகை பொருட்கள் அடங்கிய பை வழங்கப்பட்டது.





திருப்பூர் சேவாபாரதி மற்றும் ஹார்ட் புல்னெஸ் இணைந்து அமைத்துள்ள 250 படுக்கை வசதி கொண்ட இலவச கொரோனா சிகிச்சை மையம் மக்களுக்கு அர்பணிக்கப்பட்டது.

ஹிந்து முன்னணி காஞ்சிபுரம் நகர பகுதியில், ஆதரவற்ற 200 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.





சேவா பாரதி, சாரதா கல்லூரி, ஹிந்து முன்னணியினர் இணைந்து அரியகுளம், தளவாய்புரம் பகுதிகளில் கபசுரக் குடிநீர் வழங்கினர்.

கோவை வடக்கு துடியலூர் ஹிந்து முன்னணியினர் சார்பாக பொதுமக்கள் சேவைபணிக்காக ஆம்புலன்ஸ் சேவை துவக்கப்பட்டது.





விஷ்வ ஹிந்து பரிஷத், விஷ்வ ஹிந்து சேவா சமிதி மற்றும் இந்திரா கணேசன் மருத்துவமனையும் இணைந்து துவக்கியுள்ள இலவச கொரோனா கேர் சென்டர்.

# ஒரு முக்கிய அறிவிப்பு


விஜயபாரதம்

நமது விஜயபாரதம் வாசகர்களுக்கு, விஜயபாரதம் மின்னிதழ் உரிய நேரத்தில் கிடைக்கவில்லை, சரியாக கிடைப்பதில்லை, கிடைப்பதே இல்லை போன்ற சில சிக்கல்களை தீர்க்கும்பொருட்டு, விஜயபாரதம் மின்னிதழ் தற்போது விஜயபாரதம் இணையதளத்தில், https://vijayabharatham.org/dailynews என்ற இணைய முகவரியில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. வாசகர்கள் மின்னிதழை, இந்த இணைய முகவரியில் பதிவிறக்கம் செய்து படிக்கலாம், பலருக்கும் பகிரலாம்.

# வீடுகளுக்கு ரேஷன், முடக்கியதா மத்திய அரசு?

டில்லியில் வீடுகளுக்கு நேரில் சென்று ரேஷன் பொருட்களை வினியோகிக்கும் திட்டத்தை மத்திய அரசு முடக்கி உள்ளதாக ஆம் ஆத்மி கட்சியினர் குற்றச்சாட்டுத் தெரிவித்துள்ளனர். ஆனால், டெல்லியை ஆளும் கெஜ்ரிவால் அரசு, இதில் உள்ள பல உண்மைகளை மறைத்துவிட்டு வழக்கம்போல, பழியை மத்திய அரசு மீது சுமத்துகிறது. முன்னதாக, ரேஷன் கார்டு கொடுக்கும் சாக்கில் ஆம் ஆத்மி தலைவர் சந்தீப் குமார் ஒரு பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்தது. அதனால், அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டதும் அனைவரும் அறிந்ததே.

பல வருடங்களாக ரேஷன் மாபியாக்களுடன் தான் தொடர்ந்து போராடுவதாக கூறிக்கொள்ளும் கெஜ்ரிவால், கடந்த 2018ல் சுமார் 2,000 நியாய விலைக் கடைகளில் நிறுவப்பட்ட பாயிண்ட் ஆப் சேல் கருவிகளை சத்தமில்லாமல் நீக்கிவிட்டார். இதனால் மத்திய அரசுக்கு உணவு தானியங்களின் தேவை குறித்த தகவல்கள் கிடைக்கவில்லை. ஆதாருடன் ரேஷன் கார்டுகளை முழுவதுமாக இணைக்கவில்லை. இப்படி, மத்திய அரசுக்கு உரிய தகவல்கள் சென்று சேராமலும் கள்ள சந்தையில் ரேஷன் பொருட்களை விற்கவும் மறைமுகமாக உதவியுள்ளார் கெஜ்ரிவால்.

மத்திய அரசின் தொடர் வற்புறுத்தலுக்குப் பிறகே பாயிண்ட் ஆப் சேல் கருவிகளை மீண்டும் நிறுவியுள்ளார். முக்கியமாக, டெல்லியில் 'ஒரு தேசம் ஒரு ரேஷன் கார்டு' திட்டத்தை கெஜ்ரிவால் செயல்படுத்தவில்லை. இதனால், அங்குள்ள புலம் பெயர்ந்து வேலை செய்வோருக்கு உரிய உணவு தானியங்கள் கிடைப்பதிலை. இது போன்ற காரணங்களால் மத்திய அரசுக்கு டெல்லியில் உணவு தானியங்களின் தேவை, கையிருப்பின் அளவு உள்ளிட்ட முக்கிய தரவுகள் எதுவும் கிடைப்பதில்லை என்பதுதான் இதில் உள்ள முக்கிய பின்னடைவு.

இந்நிலையில், கெஜ்ரிவாலின் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள மத்திய அரசு, 'டெல்லி அரசு அவர்கள் விரும்பும் வழியில் ரேஷன் விநியோகிப்பதை தடுத்து நிறுத்தவில்லை. எந்தவொரு திட்டத்தின் கீழும் உணவு தானியங்களை விநியோகிக்கும் உரிமை மாநிலங்களுக்கு உண்டு. ஆனால், அதற்காக மத்திய அரசின் 'பான் இந்தியா' திட்டத்தை எந்த ஒரு மாநிலமும் சீர்குலைக்க

முயற்சிக்கக்கூடாது. மத்திய அரசு அனைத்து மாநிலங்களையும் ஒன்றாகவே கருதுகிறது.

கோரப்பட்டால் மாநிலத்திற்கு கூடுதல் ரேஷன் பொருட்களை மத்திய அரசு வழங்கத் தயாராக உள்ளது. டெல்லிக்கு, 'பிரதான் மந்திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனா' (பி.எம்.ஜி.கே.ஏ) திட்டத்தின் கீழ் ஏற்கனவே 63,200 மெட்ரிக் டன் ரேஷனை மத்திய அரசு உயர்த்தி வழங்கியுள்ளது. இது 176 சதவீத அதிக ஒதுக்கீடு. இதில் 73 சதவீதத்தை டெல்லி அரசு மக்களுக்கு வினியோகித்தும் உள்ளது' என தெரிவித்துள்ளது. டெல்லியின் துணை நிலை ஆளுனர் அந்த திட்டத்தை மறுபரிசீலனை செய்ய கூறினாரே தவிர நிராகரிக்கவில்லை என்பதுதான் உண்மை.

இப்படி, அனைத்துத் தவறுகளையும் தன் மீது வைத்துக்கொண்டு, அவற்றை மறைத்துவிட்டு, மத்திய அரசை குற்றம் கூறுவதையே தன் தினசரி தொழிலாக செய்து வருகிறார் டெல்லி முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவால்.

மதிமுகன்



## நான் தி.மு.க. காரன்



டெல்லியில் வேலூர் மாவட்டம், குடியாத்தம் பிச்சனூர் ஆர்.எஸ்.நகரைச் சேர்ந்தவர் சுந்தர். இவர், தி.மு.கவில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளராகப் பொறுப்பு வகிக்கிறார். இவரது மனைவி வித்யா. இவர்களுக்குத் திருமணமாகி 7 ஆண்டுகள் ஆகின்றன, மூன்று குழந்தைகள் உள்ளனர். இந்த நிலையில் அவருக்குள்ள வேறு பெண்களுடன் தொடர்பு, வேறு பெண்ணுடன் சுந்தருக்கு இருந்த தொடர்பு குறித்து அவரது மனைவி எடுத்த வீடியோ, வரதட்சணை கொடுமை உள்ளிட்ட காரணங்களால், தன் மனைவியிடம், "நான் தி.மு.ககாரன். நாங்கள்தான் ஆளும் கட்சி. நீ, எடுத்த வீடியோவை என்னிடம் கொடுத்துவிடு. என் பதவிக்கு ஏதாவது பிரச்னை ஆனது என்றால், நீ உட்பட உன் குடும்பத்தில் உள்ள அனைவரையும் லாரி ஏற்றி கொன்றுவிடுவேன்'' என மிரட்டியுள்ளார் சுந்தர். இதனையடுத்து, வித்யா காவல் நிலையத்தில் புகார் தந்தார். புகாரை குறித்து சுந்தரை விசாரிக்க காவலர்கள் தொடர்பு கொண்டபோது, "எனக்கு வேலை இருக்கிறது. ஆளும் கட்சிக்காரனையே ஸ்டேஷனுக்குக் அழைக்கிறீர்களா?'' என்று மிரட்டும் தொனியில் பேசியுள்ளார் சுந்தர். தற்போது அவர் மீது, வரதட்சணை, கொலை மிரட்டல் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள் காவல்துறையினர்.

# இதுதான் காங்கிரஸ் கலாச்சாரம்



'பஞ்சாப்பை ஆளும் காங்கிரஸ் அரசு, தனியாருக்கு தடுப்பூசி சப்ளை செய்ததில் 32 கோடிக்கும் அதிகமாக செய்த ஊழல் குறித்து விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்' என, பா.ஜ.கவின் மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான ஹர்தீப் சிங் வலியுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், "எங்கள் குழந்தைகளுக்கான தடுப்பூசி எங்கே ராகுல்? அந்த தடுப்பூசிகள் ராஜஸ்தானில், குப்பை தொட்டிகளில் உள்ளது. பஞ்சாபில், அந்த தடுப்பூசிகள் மூலம் கொள்ளை லாபம் ஈட்டப்படுகிறது. இதுதான் காங்கிரஸ் கலாச்சாரம்" என கூறியுள்ளார். மேலும், 900 கோடி ரூபாய் செலவில் புதிய பார்லிமெண்ட் கட்டடம் கட்டுவதை எதிர்க்கும் கட்சிகள், மஹாராஷ்டிராவில் ஒரு எம்.எல்.ஏ விடுதியைக் கட்ட 900 கோடி ரூபாய் செலவிடப்பட்டு உள்ளதை மறைக்கின்றன. எதிர்க்கட்சிகள், புதிய வேளாண் சட்டங்கள் குறித்து தவறான தகவல்களை தொடர்ந்து பரப்பி வருகின்றன. இந்தாண்டு 412 டன் கோதுமை கொள்முதலில் 32 சதவீதம், பஞ்சாபில் இருந்து பெறப்பட்டுள்ளது. இதற்காக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் 26 ஆயிரம் கோடி ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

# கொரோனா குறித்து எய்ம்ஸ் ஆய்வு



நமது பாரதமெங்கும் கொரோனா பரவலை கட்டுப்படுத்த தடுப்பூசிகள் போடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. தற்போது, கோவாக்சின், கோவிஷீல்டு, ஸ்புட்னிக் வி ஆகிய 3 தடுப்பூசிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ஒரு டோஸ், இரு டோஸ் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களும் கொரோனாவால் பாதிக்கப்படுவதாகத் தகவல்கள் வந்தன. இதனைத் தொடர்ந்து எய்ம்ஸ் மருத்துவ நிபுணர்கள் ஆய்வு மேற்கொண்டனர். அந்த ஆய்வுக்கு, 2 டோஸ் தடுப்பூசி செலுத்திக்கொண்டும் கொரோனா பாதித்த 36 நோயாளிகளும், ஒரு டோஸ் செலுத்திக்கொண்டும் கொரோனா பாதித்த 27 பேர் என 63 பேர் உட்படுத்தப்பட்டனர். இதில் 10 பேர் கோவிஷீல்டு தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள். மீதம் உள்ளோர் கோவேக்சின் தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள். தடுப்பூசி போடாமல் கொரோனா பாதித்தவர்களைப் போன்றே இவர்களுக்கும் கொரோனா பாதிப்பு வந்தது. பரிசோதனையின் போது வைரஸ் அளவு அதிகமாகவும் காய்ச்சலும் இருந்தது. காய்ச்சல் 5 முதல் 7 நாட்கள் வரை நீடித்தது. உடலில் தடுப்பூசியால் நோய் எதிர்ப்பு பொருள் உருவாகி இருந்தாலும், தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சிலருக்கு மற்ற நோயாளிகளைப் போலவே மருத்துவமனையில் சேர்க்கும் நிலை ஏற்பட்டது. ஆனால், யாருக்கும் மரணம் நிகழவில்லை என்று அந்த ஆய்வு நிரூபித்துள்ளது.

# ஐ.எம்.ஏ. தலைவருக்கு நீதிமன்றம் எச்சரிக்கை



ஹிந்து மதத்திற்கு எதிராகவும் கிறிஸ்தவ மதத்திற்கு ஆதரவாகவும் தொடர் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருபவர் இந்திய மருத்துவர்கள் சங்கம் (ஐ.எம்.ஏ)வின் தலைவர் ஜெயலால். இவர், தனது தலைவர் பதவியை முறைகேடாக பயன்படுத்தி நோயாளிகள், சக மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள் என அனைத்து ஹிந்துக்களையும் கிறிஸ்துவ மதத்திற்கு மதம் மாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். அவர் ஹிந்து மதம் மற்றும் ஆயுர்வேதம் உள்ளிட்ட பாரதத்தின் பாரம்பரிய மருத்துவங்களுக்கு எதிராக பேசுவது, பத்திரிகைகள் ஊடகங்களில் எழுதுவதற்குத் தடை விதிக்க வேண்டும் என்று அவர் மீது நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அவரின் நேர்காணல்கள், எழுதிய கட்டுரைகள் இதற்கு ஆதாரமாக சமர்ப்பிக்கப்பட்டன. இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள், மதப் பிரச்சாரம் செய்ய, இந்திய மருத்துவர் சங்கத்தை ஜெயலால் பயன்படுத்தக்கூடாது, இந்திய அரசியலமைப்பின் கோட்பாடுகளுக்கு எதிராக எந்த ஒரு நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது என்று உத்தரவிட்டனர்.

# ஜம்முவில் ஏழுமலையான் கோயில்

ஜம்மு காஷ்மீரில் உள்ள மஜீன் கிராமத்தில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்காக 25 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அங்கு ஏழுமலையான் கோயிலுடன் இணைந்து பக்தர்களுக்கான தங்குமிடம், வேதபாட சாலை, தியான மையம், குடியிருப்புகள், வாகன நிறுத்துமிடங்கள் உள்ளிட்டவை கட்டப்பட உள்ளன. இதற்கான ஏற்பாடுகள் குறித்த தேவஸ்தானம் அதிகாரிகள் ஆலோசனை கூட்டத்தில், வரும் 13ம் தேதி ஜம்முவில் கோயில் கட்ட பூமி பூஜை நடத்த திட்டமிட்டுள்ளனர்.



# நிராகரிக்கப்பட்ட தமிழக அரசின் தடுப்பூசி டெண்டர்

கடந்த மே 15 அன்று, 3.5 கோடி டோஸ் கொரோனா தடுப்பூசிகளை வாங்க உலகளாவிய டெண்டரை தமிழக அரசு வெளியிட்டது. ஆனால், எந்த தடுப்பூசி நிறுவனமும் தமிழக அரசின் டெண்டரை மதித்து அதற்கான விலைப்புள்ளிகளை இதுவரை சமர்ப்பிக்கவில்லை. இதனால், தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் (டி.என்.எம்.எஸ்.சி) டெண்டர் தேதியை மேலும் நீட்டிக்கலாமா வேண்டாமா என யோசித்து வருகிறது. முன்னதாக, இதேபோல பஞ்சாப் உள்ளிட்ட சில மாநில அரசுகள் ஃபைசர் உள்ளிட்ட தடுப்பூசி தயாரிப்பு நிறுவனங்களிடம் டெண்டர் கோரிக்கை விடுத்தன. ஆனால், அந்த நிறுவனங்கள், நாங்கள் நேரடியாக மத்திய அரசுடன்தான் பேச்சுவார்த்தை நடத்துவோம் என தெரிவித்து கதவடைத்துவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.



# இந்திய விஞ்ஞானிகள் வெளிப்படுத்திய உண்மைகள்

அமெரிக்க தேசிய ஒவ்வாமை மற்றும் தொற்று நோய்கள் துறை இயக்குநர், அமெரிக்க அதிபரின் தலைமை மருத்துவ ஆலோசகராக இருக்கும் அந்தோணி ஸ்டீபன் பௌசி கொரோனா நோய் குறித்த தகவல்களை வேண்டுமென்றே மறைத்தார். இதில் அவரது பங்கு குறித்து குறித்து யாராவது தகவல் வெளியிட்டால் அவர்களின் பெயர் புகழ் கெடுக்கப்படும் என மிரட்டல் விடுக்கப்பட்டது என பல பரபரப்புத் தகவல்களை இந்திய நிபுணர்களான டாக்டர் பி.எஸ். வி.ராவ், பேராசிரியர் மாதவ் நல்பத் ஆகியோர் வெளியிட்டுள்ளனர். அதற்கு ஆதாரமாக, அவர் தனது மின்னஞ்சலில் கொரோனா ஆய்வகத்தில் உருவானது என அவர் முன்னதாக தெரிவித்த கருத்துகள், பின்னர் அதனை மாற்றிக் கூறியது. முன்னணி தொற்று நோய் நிபுணர் கிறிஸ்டியன் ஆண்டர்சன், டாக்டர் பௌசிக்கு அனுப்பிய மின்னஞ்சலில், வைரஸின் சில அம்சங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அவை மனிதனால் உருவாக்கப்பட்டது என சூசகமாக தெரிவித்திருந்தது உள்ளிட்ட பல தகவல்களை தெரிவித்தனர். மேலும், பல ஆராய்ச்சியாளர்கள், உளவுத்துறையினர் கொரோனா பரவலில் உள்ள சீனாவின் வுஹான் ஆய்வகத்தின் பங்கை ஆராய விரும்புவதாக தெரிவித்தும் அதனை பௌசியும் அவரை சேர்ந்தவர்களும் முறியடித்தனர். இது, வுஹான் ஆய்வகத்தில் வைரஸ் குறித்த ஆய்வுக்கு அமெரிக்க அரசு நிதியளித்திருக்கலாம் என்ற கோட்பாட்டிற்கு வலு சேர்ப்பதாக உள்ளது எனவே, டாக்டர் பௌசியை அமெரிக்க உளவு அமைப்பான எஃப்.பி.ஐ விசாரித்திருக்க வேண்டும் என்றும் தெரிவித்தனர்.



# பழனியில் சிவலிங்கம் சேதம்

பழனி அருகே கோதைமங்கலம் பகுதியில் பெரியாவுடையார் கோயில் உள்ளது. அங்கு செல்லும் வழியில் பாப்பான் குளக்கரையில் சிவலிங்கம், நந்தி, கன்னிமார், கருப்புசாமி கோயில் உள்ளது. அந்த குளக்கரையில் இருக்கும் சிவலிங்கத்தை மர்ம நபர்கள் சிலர் சேதப்படுத்தியுள்ளனர். இது தொடர்பாக காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். இந்நிலையில், 'கோதைமங்கலம் குளத்துக்கரையில் இருக்கும் சிவலிங்கத்தை சமூக விரோதிகள் திட்டமிட்டு சேதப்படுத்தி உள்ளனர். அவர்களை கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று விஷ்வ ஹிந்து பரீக்ஷித் மாவட்ட செயலாளர் செந்தில் குமார் கூறியுள்ளார்.



# வாட்ஸ்அப்பில் புதிய வசதிகள்



முகநூலின் தலைமை நிர்வாக அதிகாரி மார்க் ஜுக்கர்பெர்க், வாட்ஸ்அப்பில் விரைவில் அறிமுகமாக உள்ள மூன்று புதிய அம்சங்களை உறுதிப்படுத்தியுள்ளார். அதன்படி, ஏற்கனவே கடந்த ஆண்டு 'டிஸப்பியரிங் மெசேஜ்' அம்சத்தினை அறிமுகம் செய்திருந்தது வாட்ஸ்அப். இந்த வசதியின் மூலம் ஏழு நாட்களுக்குப் பிறகு சாட்டில் இருந்து செய்திகள் தானாக மறைந்துவிடும். இதன் அடுத்தகட்டமாக தற்போது அனைத்து சாட்களிலும் 'டிஸப்பியரிங் மெசேஜை' இயக்கும் 'டிஸப்பியரிங் மோட்' உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டாவதாக, 'வியூ ஒன்ஸ்' எனப்படும் ஒருமுறை மட்டும் பார்ப்பது. அதாவது நாம் அனுப்பும் செய்திகளை பெறும் நபர் ஒரு முறை பார்த்த பின் அது தானாகவே மறைந்துவிடும் வசதி. மூன்றாவதாக நீண்ட காலமாகவே பலரும் எதிர்பார்த்த 'மல்டி டிவைஸ்' வசதி அறிமுகமாக உள்ளது. இந்த 'மல்டி டிவைஸ்' வசதி கடந்த சில மாதங்களாக சோதனை செய்யப்பட்டு வருகிறது. அடுத்த இரண்டு மாதங்களுக்குள் பப்ளிக் பீட்டாவில் இந்த வசதி வெளியாகும் என்ற தகவலை இந்த மார்க் தெரிவித்துள்ளார்.

# அமைதிப் படைக்கு தடுப்பூசி

ஐமைதிப் படைக்கு நமது பாரதம் சார்பில் முன்னதாகவே வாக்குறுதி அளித்தபடி, இலவசமாக 2 லட்சம் 'டோஸ் கோவிஷீல்டு' தடுப்பூசி மருந்து வழங்கப்பட்டுள்ளது. இந்த தடுப்பூசி மருந்து தலா இரு டோஸ்கள் வீதம் அமைதிப் படையினருக்கு செலுத்தப்பட்டு வருகிறது. உள்நாட்டு போர் பதற்றம் நிலவும் 12 நாடுகளில் பாதுகாப்புப் பணியில் ஐ.நா. அமைதிப் படையைச் சேர்ந்த 87,889 வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். இதில் நமது பாரதத்தை சேர்ந்த ராணுவ வீரர்கள்தான் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.



# கோவேக்சின் தடுப்பூசி பிரேசில் ஒப்புதல்

ஐதராபாத்தை சேர்ந்த பாரத் பயோடெக் நிறுவனத்தின் தயாரிப்பான கோவாக்சின் தடுப்பூசி முழுக்க முழுக்க பாரதத்தில் உருவானது. தென் அமெரிக்க நாடான பிரேசிலில் இந்த மருந்தை இறக்குமதி செய்வதற்கு அந்நாட்டிடம் ஏற்கனவே அனுமதி கோரப்பட்டிருந்தது. சில காரணங்களால் அந்த கோரிக்கையை நிராகரித்த, பிரேசில் அரசின் தேசிய சுகாதார ஒழுங்கு முறை அமைப்பான அன்விசா, தற்போது அதற்கு அனுமதி அளித்துள்ளது. இதனையடுத்து, முதற்கட்டமாக 40 லட்சம் தடுப்பூசி டோஸ்கள் பிரேசிலுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளன.






**நா**ம் விரும்பிய தொழிலை அல்லது நாம் செய்யும் தொழிலை விருப்பத்தோடு செய்தால் வெற்றி பெறலாம் என்பதற்கு பல உதாரணங்கள் உள்ளன. அதில், கர்நாடகாவைச் சேர்ந்த சாஃப்ட்வேர் இன்ஜினியரான கிஷோர் இந்துகாரியும் ஒருவர். கரக்பூர் ஐ.ஐ.டியில் இன்ஜினியரிங் முடித்துவிட்டு, தனது பி.ஹெச்.டிஐ அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்தவர் கிஷோர். அங்கேயே உலகின் முன்னணி கார்ப்பரேட் நிறுவனங்களில் ஒன்றான இண்டெல் நிறுவனத்தில் கை நிறைய சம்பளத்தோடு ஆறு ஆண்டுகள் வேலை பார்த்தார்.

2012ல் பாரதம் திரும்பிய அவர், இங்கேயே மனதுக்குப் பிடித்த ஒரு சொந்தத் தொழில் செய்ய முயற்சித்தார். ஒருமுறை ஹைதராபாத் சென்றபோது அங்கு தரமான பால் கிடைப்பதில்லை என்பதை அறிந்துகொண்ட கிஷோர், அதையே தனது தொழிலாக்கிக்கொள்ள முடிவு செய்தார். கோயம்புத்தூரில் இருந்து 20 மாடுகளை வாங்கி பால் கறந்து வீடுகளுக்கு விற்பனை செய்ய ஆரம்பித்தார். அவரின் குடும்பத்தினரும் உதவி செய்தனர். ஆரம்பத்தில் தொழிலில் நிறைய கஷ்டங்களை எதிர்கொண்டார்.

நாட்கள் செல்ல செல்ல பால் அதிகம் கிடைக்கத் தொடங்கியது, அதனை சேமித்து வைத்து விற்பனை செய்ய பிரீசர் உள்ளிட்ட பொருட்களில் தனது சேமிப்பான ஒரு கோடியை துணிந்து முதலீடு செய்தார். அவரது ஆர்வம், ஊக்கம், விடா முயற்சியால் தொழில் மெல்ல விரிவாயிற்று. இதனால், தனது 'சித்து பார்ம்' மூலமாக 2018ல் ஹைதராபாத்தைச் சுற்றியுள்ள 6 ஆயிரம் குடும்பங்களுக்கு நாள்தோறும் பால் விநியோகம் செய்யும் அளவுக்கு தனது பால் பண்ணை வளர்த்துள்ளார்.

பசு மாடு, எருமை மாடு பால் தனித்தனியாக விற்பனை செய்வது, விரும்பும் நபர்களுக்கு ஒரு மாட்டுப் பாலை தனியாக பராமரித்து விற்பது என சிந்தித்து செயல்படும் கிஷோரின்

சித்து பார்மில் தற்போது 120க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். 10,000 வாடிக்கையாளர்களுடன் ஆண்டுக்கு 44 கோடி ரூபாய் வருவாய் ஈட்டுகிறார் கிஷோர்.

உலகின் முன்னணி கார்ப்பரேட் நிறுவனத்தில் கை நிறைய சம்பளம் வாங்கி வந்த கிஷோர் இந்துகாரி, தான் விரும்பிய தொழிலுக்காக அதனை உதறித்தள்ளி, அதில் சாதனை புரிந்துள்ளது மற்றவர்களுக்கு உத்வேகம் கொடுக்கும் செயல் என்றால் அது மிகை அல்ல.